5. கவன ஈர்ப்பு.

தென்னை மரங்களுக்கு 'தஞ்சை வாடல் நோய்'.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழகத்தில் தென்னை மரங்களுக்கு ஏற்பட்டுள்ள தஞ்சை வாடல் நோய் பற்றி திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், என். எஸ். வி. சித்தன், பொ. விஜயராகவன், இரா. தாமரைக்கனி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

* திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, தமிழகத்தில் தென்னை மரங்களுக்கு ஏற்பட்டுள்ள தஞ்சை வாடல் நோய் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை.

தமிழ்நாட்டில் சுமார் ஒரு இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் முக்கியமாக கடலோரப் பகுதிகளில் உள்ள தஞ்சை, முகவை, நெல்லை மற்றும் குமரி மாவட்டங்களில் அதிக பரப்பளவில் தென்னை பயிரிடப்படுகிறது. நெல்லை, குமரி மாவட்டங்களுக்கு பக்கத்து மாநிலத்திலே இருந்து இந்த வாடல் நோய் பரவாவண்ணம் இருக்க ஐந்து சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கென தனியாக எண்ணெய் வித்துத் துறையின் கீழ் ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் ஒரு வேளாண்மை உதவியாளர் பணிபுரிந்து வருகிறார். இந்நோய் பரவாவண்ணம் இருக்கவேண்டிய தடுப்பு நடவடிக்கைகளை அவர் எடுத்து வருகிறார். இதுபோல் தஞ்சாவூர் மாவட்டத்திலும் இப்போது காணப்படுகின்ற தஞ்சை வாடல் நோய் மேலும் பரவாமல் இருக்க மேற்படி மாவட்டத்திலுள்ள எண்ணெய் வித்துத் துறையின் கீழ் உள்ள எல்லா பணியாளர்களும், வேண்டிய தடுப்பு முறைகளுக்கான நடவடிக்கைகளும் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இந் நோய் தற்சமயம் ஆரம்ப கட்டத்தில் இருப்பதால் இதை உடனே கட்டுப்படுத்தி விடலாம், அதற்கு ஒரு சதவிகிதம் 'போர்டோ' மிக்சரை 40 லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒவ்வொரு மரத்தைச் சுற்றியும் 60 சென்டி மீட்டர் தூரத்தில்

1981 மார்ச் 4] [திரு. கா. காளிமுத்து]

ஊற்றினால் இந்த வியாதியைக் கட்டுப்படுத்தி விடலாம். அல்லது 2 கிராம் 'பெவிசிடின' 100 மில்லி தண்ணீரில் கரைத்து மரத்து தண்டில் செலுத்துவதன் மூலமும் இதைக் கட்டுப்படுத்த லாம். எனவே, தற்பொழுது தஞ்சையில் காணப்பட்ட நோய் சுமார் ஒன்று முதல் மூன்று சதவிகிதமே ஆகும். இதனால், இதைச் சார்ந்த தொழில்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படாது.

திரு. ப. பொன்னுரங்கம் ; பேரவைத் தலைவரவர்களே, இந்த தென்னை மரத்தின் மூலம இந்திய துணைக்கண்டமே, உலகத்திலே 3-வது இடத்தை வகிக்கின்றது என்று பத்திரிகை களிலே எல்லாம் பார்த்திருக்கிறோம். இந்த மரம் அழிந்து விடக்கூடாது. மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு இலக்கியத் திலே நல்ல ஈடுபாடு உண்டு. ஔவையார் ''நன்றி ஒருவருக்கு செய்தக்கால் அந்நன்றி என்று தருங்கொல் என வேண்டாம் என்று தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரை தலையாலே தான தருதலால்'' என்று சொல்கிறார். எனவே, அப்படிப்பட்ட தென்னை மரம் வருங்காலத்திலே இப்படி ஒரு மரம் இருந்ததா என்று கேட்கின்ற அளவுக்கு இல்லாமல் போய்விடும் என்று பத் திரிகைகளிலே எல்லாம் எழுதப்படுவதை நாம் பார்க்கிறோம், இந்த மரம் அழிந்தால் பல தொழிலாளர்களும் பாதிக்கப்படு வார்கள். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்னாற்காடு போன்ற மாவட்டங்களிலே தேங்காய் மட்டையிலே இருந்து கயிறு திரிக்கின்ற தொழிலிலே பல இலட்சக்கணக்கான மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய தொழில் எல்லாம் பாதிக்கப்பட்டுவிடும்.

அடுத்து நாட்டுப் படகைப் பொறுத்தவரையில் அதிலே சில கார்க்கிங் செய்வதற்கு தேங்காய் மட்டையைப் பயன்படுத்து கின்றார்கள். அதுவும் பாதிக்கப்பட்டுவிடும்.

[முற்பகல் 11-10]

ஆக இத்தகைய தென்னை மரங்கள் அழியும் நிலைக்கு போகு மானால் நிறைய பாதிப்புகள் ஏற்படும். உலகத்திலேயே 3-வது இடத்தைப் பெற்றிருக்கிற அந்த நிலையும் பாதிக்கப்பட்டுவிடும். அது மட்டும் அல்லாமல் இலக்கியத்திலே ஒரு உவமானம் காட் டும் அளவுக்கு கையாளப்பட்ட அந்த நிலைக்கும் குந்தகம் ஏற் படும். தென்னையைச் சார்ந்துள்ள பல சிறு தொழில்களும் பாதிக்கப்பட்டு, அதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும் பாதிக் கப்படுவார்கள். 5 இடங்களிலே அதற்கான நோய் தடுப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப் படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்பொழுது அந்த அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன? துரிதமாக செயல் படுகிறதா இல்லையா? அல்லது மற்ற விஷயங்களைப் போலவே இதுவும் ஆமை வேகத்தில் நடைபெறுகிறதா, அப்படியென்றால் அதைத் தடுக்க அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே தென்னை மரத்தினுடைய ப ன்களைப் பற்றி இலக்கிய நயத் தோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன் னார்கள். அதனுடைய பயனை வேளாண்மைத் துறையும் மிக நன்றாக உணர்ந்து உலக வங்கியினுடைய .உதவியுடன், மிகப் பெரிய தென்னைப் பண்ணை ஒன்றை நிறுவ ஏற்பாடு செய்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தென்னைக்கு ஏற்பட்டுள்ள இந்த நோய் 3 சதவீதம் வரைதான் காணப்படுகிறது, அதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் ஏற் கெனவே எடுக்கப்பட்டு விட்டது. ஆகவே நிச்சயமாக அந்த நோய் தடுக்கப்பட்டு, சிறப்பாக அவைகள் வளரும் அளவிற்கு நிலைமை உருவாகும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னையை தாக்கியுள்ள இந்த நோயைப் பற்றி மிக விவரமாக அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார் கள். சென்னையிலே கூட அந்த நோயால் தாக்கப்பட்டு தென் னைகள் பழுது பட்டிருப்பதாக இந்து பத்திரிகையிலே கூட செய்தி வந்திருக்கிறது. இந்த நோய் பரவாமல் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் நிலையில், வானொலி மூலமாக, மற்ற எல்லாப் பத்திரிகைகளின் மூலமாக விளம்பரப்படுத்தினால் அனைவரும் அறிந்துக் கொண்டு தடுப்பு நடவடிக்கை எடுக்க உதவியாயிருக்கும். ஏனென்றால் அதிக வருமானத்தைத் தரக் கூடிய இந்தத் தென்னை மரங்கள் அழிந்து விடக் கூடாது என்று அதை அனைவரும் வரவேற்பார்கள். ஆகவே இப்படி விளம் பரங்கள் மூலமாக அந்தச் செய்தியைப் பரப்புவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல .நோய் தடுப்பு முறைகளைப் பற்றி வானொலி மற்றும் செய்தித்தாள்கள் மூலமாக விளம்பரம் செய்ய முயற்சி எடுக்கலாம்.

*திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், உரிமைப் பிரச்னை மீது தீர்ப்புச் சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்திலே ** அதனால் அதை நீக்குவதற்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கி றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** அதை அவைக்குறிப் பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று உத்தரவு இடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற் றப் பெற்றது.